KURIKULUM STANDARD SEKOLAH RENDAH (SEMAKAN 2017)

# தமிழ்மொழி
# BAHASA TAMIL

## SEKOLAH JENIS KEBANGSAAN TAMIL
## தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி

ஆண்டு
TAHUN
**5**




**PENULIS** / ஆசிரியர்கள்
SARASWATHY KANNAN
சரஸ்வதி கண்ணன்
THAVAMANI MUTHU
தவமணி முத்து

**EDITOR** / பதிப்பாசிரியர்
PITHAULLAH HAYATH BASHA
பிதாவுல்லாஹ் ஹயாத் பாஷா
RAJENDRAM PERUMAL
இராஜேந்திரம் பெருமாள்
DR. RICHARD SAMY PAKARI
முனைவர் ரிச்சர்ட் சாமி பக்கிரி

**PEREKA BENTUK** / வடிவமைப்பாளர்
APPUTHI MURUGAYA
அப்பூதி முருகையா

**ILUSTRATOR** / ஓவியர்கள்
AZRUL HELMI BIN ABD. WAHAB
அஸ்ருல் ஹெல்மி பின் அப்துல் வஹாப்
MASEH BIN SUPIAN
மாசே பின் சுபியான்



Multi Educational Book Enterprise
2020

KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

No Siri Buku: 0036

KPM2019 ISBN 978-967-2046-46-2

Cetakan Pertama 2020

© **Kementerian Pendidikan Malaysia**

Hak Cipta Terpelihara. Mana-mana bahan dalam buku ini tidak dibenarkan diterbitkan semula, disimpan dalam cara yang boleh dipergunakan lagi, ataupun dipindahkan dalam sebarang bentuk atau cara, baik dengan cara bahan elektronik, mekanik, penggambaran semula mahupun dengan cara perakaman tanpa kebenaran terlebih dahulu daripada Ketua Pengarah Pelajaran Malaysia, Kementerian Pendidikan Malaysia. Perundingan tertakluk kepada perkiraan royalti atau honorarium.

**Diterbitkan untuk**
**Kementerian Pendidikan Malaysia oleh:**

**Multi Educational Book Enterprise**
No. 22A-2, Jalan PJS 8/4,
Dataran Mentari, Bandar Sunway,
46150 Petaling Jaya,
Selangor Darul Ehsan.
Tel: 03-5636 2568
Faks: 03-5636 0825
Laman Web: http://www.multiedu.com.my

**Reka Letak dan Atur Huruf:**

**Multi Educational Book Enterprise**

Muka Taip Teks: Dhanyeta
Saiz Muka Taip Teks:14 poin

**Dicetak oleh:**

**Aslita Sdn. Bhd. (146102-U)**
No. 20, Jalan 4/10B, Spring Crest Industrial Park
Batu Caves, 68100 Kuala Lumpur.
Tel:03-61867645
Faks:03-61867635

# PENGHARGAAN

Penerbitan buku teks ini melibatkan kerjasama banyak pihak. Sekalung penghargaan dan terima kasih ditujukan kepada semua pihak yang terlibat:

- Jawatankuasa Penambahbaikan Pruf Muka Surat, Bahagian Sumber dan Teknologi Pendidikan, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Penyemakan Pembetulan Pruf Muka Surat, Bahagian Sumber dan Teknologi Pendidikan, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Penyemakan Naskhah Sedia Kamera, Bahagian Sumber dan Teknologi Pendidikan, Kementerian Pendidikan Malaysia.
- Pegawai-pegawai Bahagian Sumber dan Teknologi Pendidikan, Bahagian Pembangunan Kurikulum, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Peningkatan Mutu Penerbit.
- SJKT, Kajang, Selangor Darul Ehsan.
- SJKT, Serdang, Selangor Darul Ehsan.

# உள்ளடக்கம்


முன்னுரை

**தொகுதி 1: அறிவியலும் நாமும்**
1. பூமித்தாயைக் காப்போம் 1
2. விந்தை உலகம் 2
3. உயிரினங்கள் பல 4
4. செய்யுளும் மொழியணியும் 6
5. இலக்கணம் 8

**தொகுதி 2: மொழி**
1. முத்தமிழ் 9
2. தொல்காப்பியம் 10
3. புதுமைக் கவிஞன் 12
4. செய்யுளும் மொழியணியும் 14
5. இலக்கணம் 16

**தொகுதி 3: சுற்றுச்சூழல்**
1. பசுமை நாடுவோம் 17
2. தூய்மை காப்போம் 18
3. சுற்றுச்சூழல் பாதுகாப்பு 20
4. செய்யுளும் மொழியணியும் 22
5. இலக்கணம் 24

**தொகுதி 4: சமூகவியல்**
1. ஒன்றுபடுவோம் 25
2. விழுவது எழுவதற்கே 26
3. பண்டிகைகள் 28
4. செய்யுளும் மொழியணியும் 29
5. இலக்கணம் 31

**தொகுதி 5: அனுபவங்கள்**
1. சிந்திப்போம்! தீர்வு காண்போம்! 33
2. சந்தையில் ஒரு நாள் 34
3. நாமும் நடிக்கலாம் 36
4. செய்யுளும் மொழியணியும் 38
5. இலக்கணம் 40

**தொகுதி 6: நன்னெறி போற்றுக**
1. எண்ணமே மகிழ்ச்சி 41
2. நீதி கிடைத்தது 42
3. பேராசை 44
4. செய்யுளும் மொழியணியும் 46
5. இலக்கணம் 48

**தொகுதி 7: நாடும் வளமும்**
1. மலேசியாவில் விவசாயம் 49
2. விவசாயத்தில் இயற்கையும் நவீனமும் 51
3. சுற்றுலா செல்வோம் 53
4. செய்யுளும் மொழியணியும் 54
5. இலக்கணம் 56

**தொகுதி 8: தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்**
1. தகவல் ஊடகங்கள் 58
2. வானொலி 59
3. செய்தித்தாளின் பங்கு 61
4. செய்யுளும் மொழியணியும் 62
5. இலக்கணம் 64

**தொகுதி 9: கல்வி**
1. கற்பதில் சுதந்திரம் 66
2. இணைப்பாடக் கல்வி 67
3. தொழிற்கல்வியா ஏட்டுக்கல்வியா 69
4. செய்யுளும் மொழியணியும் 70
5. இலக்கணம் 72

**தொகுதி 10: உணவும் மனநலமும்**
1. உணவும் நமது கடமையும் 74
2. நோயற்ற வாழ்வு 76
3. மனவளமே உடல் பலம் 77
4. செய்யுளும் மொழியணியும் 79
5. இலக்கணம் 81

**தொகுதி 11: குடியியல் அறிவோம்**
1. சிறார் பாதுகாப்பு மையம் 82
2. சிறந்த வழிகாட்டி 84
3. நற்பணி ஆற்றுவோம் 86
4. செய்யுளும் மொழியணியும் 88
5. இலக்கணம் 90

**தொகுதி 12: பொறுப்பும் பாதுகாப்பும்**
1. குறிப்பறிவுச் செயல் 91
2. சீர்மிகு சிந்தனை 92
3. சேமிப்பு நம் பொறுப்பு 94
4. செய்யுளும் மொழியணியும் 95
5. இலக்கணம் 97

**தொகுதி 13: உயிரினங்களின் தனித்தன்மைகள்**
1. ஆற்றலும் நம்பிக்கையும் 99
2. பறவைகள் பலவிதம் 100
3. வெட்டுக்கிளி 102
4. செய்யுளும் மொழியணியும் 103
5. இலக்கணம் 105

**தொகுதி 14: வரலாறு**
1. தகவல் அறிவோம் 107
2. பூஜாங் பள்ளத்தாக்கு 109
3. தொலைக்காட்சி 110
4. செய்யுளும் மொழியணியும் 112
5. இலக்கணம் 114

**தொகுதி 15: நல்வாழ்வு**
1. கைப்பேசியின் பயன் 115
2. நல்லதை நாடுவோம் 117
3. கூட்டுக் குடும்பம் 119
4. செய்யுளும் மொழியணியும் 121
5. இலக்கணம் 123

**தொகுதி 16: முன்னேற்றப் பாதைகள்**
1. அன்றும் இன்றும் 124
2. இருட்டில் ஒளி 125
3. அபூர்வ சக்தியில் நான் 127
4. செய்யுளும் மொழியணியும் 129
5. இலக்கணம் 131

**தொகுதி 17: இலக்கியமும் சுவையும்**
1. செய்நன்றி 132
2. சுவைமிகு இன்சொல் 134
3. சூழ்ச்சியின் விளைவு 135
4. செய்யுளும் மொழியணியும் 137
5. இலக்கணம் 139

**தொகுதி 18: குடும்பமும் நலமும்**
1. நற்சிந்தனை கொள்வோம் 140
2. மனநலம் 141
3. உறவுகளின் இனிமை 143
4. செய்யுளும் மொழியணியும் 144
5. இலக்கணம் 146

**தொகுதி 19: தமிழர் கலைகள்**
1. கைவினைக் கலைகள் 147
2. நடனக் கலைகள் 148
3. மாணவர்களும் கலைகளும் 150
4. செய்யுளும் மொழியணியும் 151
5. இலக்கணம் 153

**தொகுதி 20: கதையும் கவிதையும்**
1. கதை சொல்லப் போகிறேன் 155
2. நரியின் தந்திரம் 156
3. நட்பின் பலம் 158
4. செய்யுளும் மொழியணியும் 159
5. இலக்கணம் 162

**தொகுதி 21: மனமகிழ் நடவடிக்கைகள்**
1. இன்பம் பெறுவோம் 163
2. வாசிப்போம், வளம் பெறுவோம் 164
3. தற்காப்புக் கலைகள் 166
4. செய்யுளும் மொழியணியும் 167
5. இலக்கணம் 169

**தொகுதி 22: தமிழர் திருநாள்**
1. உழவர் திருநாள் 171
2. நன்றி கூறும் விழா 172
3. இனிய அனுபவம் 174
4. செய்யுளும் மொழியணியும் 176
5. இலக்கணம் 178

**தொகுதி 23: கலையும் இசைக்கருவிகளும்**
1. பல்வகை நடனங்கள் 179
2. நடனமும் நளினமும் 180
3. இசை முழக்கம் 182
4. செய்யுளும் மொழியணியும் 184
5. இலக்கணம் 186

**தொகுதி 24: சுகாதாரம் வாழ்வின் அடித்தளம்**
1. நச்சுக் கிருமி 187
2. சீரான வாழ்வு 188
3. வளத்துடன் வாழ்வோம் 190
4. செய்யுளும் மொழியணியும் 192
5. இலக்கணம் 194

**தொகுதி 25: விளையாட்டு**
1. விளையாடுவோம் வாரீர் 195
2. ஆடுபுலி ஆட்டம் 196
3. பாரம்பரிய விளையாட்டுகள் 197
4. செய்யுளும் மொழியணியும் 199
5. இலக்கணம் 201

# முன்னுரை

**வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி**
**வாழிய வாழிய வே!**

எனும் மகாகவி பாரதியாரின் கவிதை வரிகளை முன் வைத்து, சிரம் தாழ்த்தி வணங்குகிறோம். கல்விக் கூடம் எனும் சோலையில் வண்ணப் பூக்களாக மலர்ந்து மணம் வீசுபவர்கள் நம் மாணவர்கள். இவர்களின் அறிவாற்றலைப் பெருக்குவதற்கு அடித்தளமாக விளங்குவது பாடநூல்கள் என்றால் அது மிகையாகாது.

தமிழ்மொழிக் கல்வியானது நம் மாணவர்களின் அறிவு, ஆன்மிகம், உள்ளம், உடல் ஆகிய கூறுகளை வளப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இப்பாடநூல் இருபத்து ஐந்து தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு தொகுதியும் ஐந்து பாடங்களை உள்ளடக்கி மலர்ந்திருக்கின்றது. கருப்பொருளுக்கேற்பக் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய அடிப்படைத் திறன்களும் செய்யுள் மொழியணி, இலக்கணம் ஆகியன இணைக்கப்பட்டுள்ளன. செய்யுள் மொழியணி, இலக்கணம் ஆகிய கூறுகள் மாணவர்களின் நற்பண்புகளையும் முறையான இலக்கண விதிகளையும் எடுத்துரைக்கின்றன.

ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்காகப் பரிந்துரைக்கப்பட்ட கற்றல்தரங்களை முறையாகக் கொண்டு இப்பாடநூல் படைக்கப்பட்டுள்ளது. இப்பாடநூலானது மாணவர்களின் மொழியாற்றலையும் ஈடுபாட்டையும் வளர்ப்பதற்குப் பெருந்துணை புரியும்.

இறுதியாக, இப்பாடநூலைப் படைப்பதற்குப் பெரிதும் உதவியாகவும் வழிகாட்டியாகவும் தோள் கொடுத்த மலேசியக் கல்வி அமைச்சின் கல்விக் கருவூல தொழில்நுட்பப் பிரிவிற்கு மனமார்ந்த நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கின்றோம்.

**எங்கள் தமிழ்மொழி!**
**எங்கள் தமிழ்மொழி!**
**என்றென்றும் வாழிய வே!**

அன்புடன்,
ஆசிரியர்கள்.

# மொழிக்கூறுகளுக்கான படவுருக்கள்


தொகுதிகள்


பாடம்


கேட்டல் பேச்சு


வாசிப்பு



எழுத்து


செய்யுளும் மொழியணியும்


இலக்கணம்


ஆசிரியர் குறிப்பு


அருஞ்சொற்கள்


தகவல் கூடம்


நடவடிக்கை


சொல்லும் பொருளும்


உயர்நிலைச் சிந்தனைத் திறன்

**இணையத் தளம்**

து.து.குறியீடு

App Store  Google play

ஒரு தலைப்பின் உள்ளடக்கத்திற்குத் தொடர்புடைய அகப்பக்கத்தைத் தேட மாணவர்களை ஊக்குவித்தல்.

தொடர்புடைய தேடுபொருளைப் பயனீட்டாளர்கள் விரைவில் தேட (QR) துனைவுதுலக்கக் குறியீடு (து.து.குறியீடு) துணைபுரிகிறது.

ஜாப்பரைப் (ZAPPAR) பெறவும்

Google play  App Store

முன்கூட்டியே ஜாப்பர் (Zappar) எனும் செயலியைப் பதிவிறக்கம் செய்து இந்நோக்குக் குறியீட்டை அடையவும்.

**என்னை வருடுக**

AR நிலைபெருக்குக் குறியீடு

இயல்பு காட்சியைப் பெரிதாக்கிக் காட்டும் குறியீடு.

VIII
KPM

# பாடம் 1 பூமித்தாயைக் காப்போம்

## கலந்துரையாடுக.



மாணவர்களே! நாம் வாழும் இந்தப் பூமி நம் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றுகிறது. நம்மை நேசிக்கிறது, நாம் வாழ்கிறோம், வளர்கிறோம். ஆனால், இந்தப் பூமியை நாம் நேசிக்கிறோமா? அதன் மீது அக்கறை கொள்கிறோமா?

இதனை வலியுறுத்தும் நாள்தான், உலக சுற்றுச்சூழல் தினம். ஒவ்வொரு வருடமும் ஜூன் 5ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் ஒரு கருப்பொருள் கொண்டு இது கொண்டாடப்படுகிறது. பாலைவனம், உங்கள் சேவைக்காக இயற்கை, நிலையான உற்பத்தி நுகர்வு போன்ற கருப்பொருள்களில் பல கருத்துகள் கூறப்பட்டன. பூமியை நேசித்துப் பாதுகாக்கும் பொருட்டு மக்களுக்கு விழிப்புணர்வு வருவதற்காகவே இத்தகைய கருப்பொருள்கள் பேசு பொருளாகின்றன.

**‘பூமி நமக்கு மட்டும் சொந்தமல்ல நமக்கும் சொந்தம்’**

## நடவடிக்கை 1

**செவிமடுத்தவற்றிலுள்ள முக்கியக் கருத்துகளையொட்டிக் கருத்துகளைக் கூறுவர்.**

செவிமடுத்திடுக

1.3.6 - செவிமடுத்தவற்றிலுள்ள முக்கியக் கருத்துகளையொட்டிக் கருத்துரைப்பர்.

ஆசிரியர் குறிப்பு:
- கருத்துகளை வாசித்து அறியப் பணித்தல்.
- முக்கியக் கருத்துகளையொட்டிக் கருத்துரைத்து உரையாடச் செய்தல்.

வி.வ.கூ: கட்டுவியம் உ.சி.தி: பகுத்தாய்தல் 21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்



# பாடம் 2 விந்தை உலகம்



## வாசித்து அறிக.



கடலின் அடித்தளம் ஒரு விந்தையான உலகமாகும். பல அதிசயங்கள் இங்கு நிறைந்துள்ளன. இங்குச் சமவெளிகள் உள்ளன. மேலும், இருள் சூழ்ந்த உலகம் எனவும் கூறப்படுகின்றது.

நிலவைப் போல் கடல் அமைதியான உலகம் அல்ல. அசைவற்ற உலகமும் அல்ல. புவியின் மேற்பகுதியில் ஏற்படும் குமுறல்கள், அதிர்வுகள் காரணமாகக் கடலின் அடித்தளப் பகுதிகள் அதிர்கின்றன.

எளிதில் உயிர் வாழ முடியாத இந்த இருள் உலகில், பல்வகையான உயிரினங்கள் வெவ்வேறு வடிவங்களில் வாழ்ந்து வருகின்றன. கடலியல் வல்லுநர்கள், பல நவீனக் கருவிகளைக் கொண்டு ஆழ்கடலின் அதிசயங்களை அறிந்து தெரிவித்துள்ளனர். கடலின் அடித்தளத்திலிருந்து நோக்கும்போது கண்டங்கள் ஓங்கி வளர்ந்துள்ள கருங்கற்பாளங்களாகவே காட்சியளிக்கும் என்கின்றனர். மேலும், நதிகள் யாவும் வண்டல் மண்ணைக் கடலில் கொண்டு போய்ச் சேர்க்கின்றன என்றும் அந்த வண்டல் மண் எட்டுக் கனமைல் இருக்கும் எனவும் கணக்கிட்டுள்ளனர். ஆனாலும், இந்த வண்டல் மண் சிறிது அளவுகூட கடலின் அடித்தளத்தில் காணப்படவில்லை. வண்டல் மண்ணின் பெரும் பகுதி கடலுக்கு வந்து சேரும்போதே கரைந்துவிடுகிறது. கடலின் அடித்தளத்தில் வெறும் பாறைகளே காணப்படுகின்றன. வண்டல் மண் இல்லாதிருப்பது புரியாத புதிராகவே உள்ளது.

ஒளிபுக முடியாத நடுக்கடல் ஆழத்தில் சில மீன் வகைகள் உயிர் வாழ்வதையும் கண்டுபிடித்துள்ளனர். அவ்வகை மீன்கள் நீரின் உள்ளழுத்தத்தைப் பொருட்படுத்தாமல் உல்லாசமாக நீந்துகின்றன. நீரின் அழுத்தத்தை எதிர்த்து நின்று தாங்கக்கூடிய திறனை அவற்றின் அவயங்கள் பெற்றிருக்கின்றன. இவ்வகை மீன்களுக்குப் பெரிய வாயும் கூரிய பற்களும் இருக்கும். கவர்ந்திழுக்கும் ஒளியின் உதவியால் இரைகளை நெருங்கச் செய்து உண்ணுகின்றன.

**அருஞ்சொற்கள்**

- அடித்தளம்
- குமுறல்கள்
- வண்டல் மண்
- அவயங்கள்
- ஆழ்கடல்

ஆழ்கடல் அகழிகளிலும் பள்ளத்தாக்குகளிலும் கடல் வெள்ளரி, நத்தை, சிப்பி போன்ற சிற்றுயிர்களும் காணப்படுகின்றன. மண்ணைத் துளைத்துச் செல்லும் புழு வகைகளும் அங்கு வாழ்கின்றன. அவை தங்கள் உடலைத் தற்காத்துக் கொள்ள சுருள் சுருளாக வைத்துக் கொள்கின்றன.

**என்னை நுணுகு**

எனவே, கடலின் அடித்தளம் ஒரு பாதாள உலகம் மட்டுமல்ல, பல அற்புதங்கள் நிறைந்த விந்தை உலகமும் ஆகும்.

## நடவடிக்கை 1

**கருத்துணர் கேள்விகளுக்கு விடையளித்திடுக.**

1. விந்தையான உலகம் எனக் கூறப்படுவது எது?
2. கடலின் அடித்தளம் அதிர்வடையக் காரணம் என்ன?
3. வண்டல் மண் ஏன் கடலில் காணப்படவில்லை?
4. நடுக்கடலில் வாழும் மீன்களின் சிறப்புகள் யாவை?
5. கடலின் அடித்தளத்தில் கண்ட அற்புதங்களை வரிசைப்படுத்திக் கூறுக.

**தகவல் கூடம்**

- மனிதன் கண்டுபிடித்த முதல் அறிவியல் சாதனம் சக்கரம்.

கடல்வாழ் உயிரினங்கள் அழியாமல் காக்க என்ன செய்யலாம்?

2.6.7 - அறிவியல் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

ஆசிரியர் குறிப்பு:

- உரைநடைப் பகுதியை வாசித்து அறிதல்.
- கருத்துணர் கேள்விகளுக்கு விடையளித்தல்.

வி.வ.கூ: அறிவியலும் தொழில்நுட்பமும்  உ.சி.தி: பகுத்தாய்தல்  21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

## பாடம் 3 உயிரினங்கள் பல

### வாசித்து எழுதுக.



**சிங்கம்**
- பாலூட்டி வகை - காட்டு விலங்கு
ஆண் சிங்கம் - அரிமா
பூனை - இனத்தைச் சேர்ந்த

**தவளை**
- நீர் நிலைகளில் - நிலத்திலும் - வாழும்
- தவளை, தேரை - இரு பிரிவுகள் - பெண்
தவளை - ஆண் தவளையைவிட - பெரிய

**குயில்**
- சொந்தமாகக் கூடு - கட்டுவதில்லை -
பெண் குயில் - காக்கையின் - முட்டை -
முட்டையிலிருந்து - பதினான்கு நாள்களில்

**பனிக்கரடி**
- மாமிச உண்ணி - முதன்மை உணவு
- சீல் - நீரிலும் நிலத்திலும் - வேட்டை

**கொக்கு**
- நீருக்கு அருகில் - வாழும் - நீண்ட,
வளைந்த கழுத்து - கால்கள் - நதியன்,
நரையன், கருநாரை - பெயர்கள்

**முயல்**
- இப்பிராணி - தாவிர உண்ணி - நீண்ட
காதுகள் - வேகமாக ஓடக் கூடியவை -
தனியாகவோ - சேர்ந்தோ வாழும்

### நடவடிக்கை 1

**தலைப்பையொட்டிக் குறிப்புகளைக் கொண்டு வாக்கியங்களை அமைத்திடுக.**

## நடவடிக்கை 2

**தலைப்பிற்கேற்ப வாக்கியங்கள் அமைத்திடுக.**

**கிளி**

- அமெரிக்க நாட்டில் நீல நிறக் கிளிகள் அதிகம்
- பச்சை நிறம் மட்டுமே நினைவுக்கு வரும்
- முட்டை இடும்
- 372 இனங்கள் உள்ளன
- ஆண், பெண் கிளிகள் மாறி மாறி முட்டைகளை அடைகாக்கும்
- சராசரி 50 ஆண்டுகள் உயிர் வாழும்

## நடவடிக்கை 3

**குறிப்புகளைக் கொண்டு வாக்கியங்கள் அமைத்திடுக.**

**செல்லப் பிராணிகள்**

- அன்பு செலுத்துதல்
- வகை
- வாழும் இடம்
- வளர்க்கும் முறை
- உணவு

## நடவடிக்கை 4

**கொடுக்கப்பட்ட தலைப்பையொட்டி வாக்கியங்கள் எழுதுக.**

1. பாலூட்டிகள்
2. யானை
3. வனவிலங்குகள்
4. காடுகளின் பயன்கள்

### தகவல் களம்

- தவளையின் இதயம் மூன்று அறைகள் கொண்டது.
- குதிரையின் உயரத்தை 'ஹேண்ட்' என்ற அளவைக் கொண்டு அளப்பார்கள்.

3.4.18 - தலைப்பையொட்டி வாக்கியம் அமைப்பர்.

ஆசிரியர் குறிப்பு:

- வாக்கியங்களை வாசித்து அறிதல்.
- தலைப்புக்கேற்ற வாக்கியங்கள் அமைத்தல்.

வி.வ.கூ: சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் உ.சி.தி: பகுத்தாய்தல் 21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## மரபுத்தொடரையும் பொருளையும் அறிக.




### மரபுத்தொடரும் பொருளும்

- **பெயர் பொறித்தல்** - புகழை நிலைநாட்டுதல்
- **தட்டிக் கழித்தல்** - ஏதாவது காரணம் கூறித் தவிர்த்தல்
- **திட்ட வட்டம்** - உறுதியாக

## நடவடிக்கை 1

**மரபுத்தொடரையும் பொருளையும் வாசித்து அறிக.**

### சொல்லும் பொருளும்

- தேசம் - நாடு
- அறிவியல் - விஞ்ஞானம்
- திறம்பட - சிறப்பாக
- பணி - தொழில்

## நடவடிக்கை 2

**வாக்கியங்களில் பொருத்தமான மரபுத்தொடரைப் பயன்படுத்திக் கூறுக.**

1. அன்பழகன் வியாபாரத் துறையில் வெற்றி பெற வேண்டும் என உறுதி கொண்டிருந்தான்.
2. மும்மொழிகளிலும் திறமையாகப் பேசிய தமிழவன் சிறந்த பேச்சாளர் என்று மீண்டும் சிறப்புச் செய்யப்பட்டான்.
3. பள்ளிப் பருவத்தில் கொடுக்கப்பட்ட பல பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளாத காவியன் இன்று தன்னம்பிக்கையின்றி வாழ்கிறான்.
4. எந்தச் சூழலிலும் தான் சுயதொழிலையே செய்ய வேண்டுமென மாமா உறுதியாய் நின்றார்.
5. பல்கலைக்கழகத்தில் பயிலும் அண்ணன் தாம் ஒரு பட்டதாரி ஆசிரியராக வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்.
6. தொடர்ந்து மூன்று ஆண்டுகளாகச் சிறந்த தொழில் முனைவருக்கான விருதைத் திரு. மணிமாறன் பெற்றார்.
7. “மாணவர்களே! நீங்கள் அனைவரும் மிகச் சிறந்த மாணவர்கள். மிகவும் பொறுப்புடன் எந்த வேலையைக் கொடுத்தாலும் பெருமனத்தோடு ஏற்றுக் கொண்டு செயல்படுகிறீர்கள்,” என்று தலைமையாசிரியர் பாராட்டினார்.




4.6.5 - ஐந்தாம் ஆண்டுக்கான மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு:

- உரையாடலை வாசிக்கப் பணித்தல்.
- மரபுத்தொடர்களையும் பொருளையும் அறிந்து வாக்கியங்களில் பயன்படுத்திக் கூறப் பணித்தல்.

வி.வ.கூ: நன்னெறிப் பண்பு   உ.சி.தி: மதிப்பிடுதல்   21ஆம் நூ. தி: அன்பானவர்/ பரிவுள்ளவர்

# பாடம் 5 இலக்கணம்

## தோன்றல் விகாரம் அறிக.


நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது இடையில் **ஓர் எழுத்துப் புதிதாகத் தோன்றும்.**

**சுட்டு + உயிர்மெய்**

எடுத்துக்காட்டு:

அ + தலைவன் = அ**த்**தலைவன்

இ + காடு = இ**க்**காடு



## நடவடிக்கை 1

**சேர்த்தெழுதுக.**

1. அ + கட்டடம் = ______
2. இ + படகு = ______
3. அ + பறவை = ______
4. இ + குடம் = ______
5. அ + துறை = ______
6. இ + பெண் = ______
7. அ + சிலை = ______
8. இ + பொருள் = ______
9. அ + கரை = ______
10. இ + சுடர் = ______
11. அ + தேர் = ______
12. இ + தோட்டம் = ______
13. அ + கோடு = ______
14. இ + பண் = ______

5.7.2 - தோன்றல் விகாரப் புணர்ச்சியில் நிலைமொழியில் சுட்டும் வருமொழியில் உயிர்மெய்யும் புணர்தல் பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு:

- தோன்றல் விகாரப் புணர்ச்சியை அறியச் செய்தல்.
- சேர்த்தெழுதுதல் பயிற்சியைப் பிழையறச் செய்யப் பணித்தல்.

வி.வ.கூ: மொழி    உ.சி.தி: உருவாக்குதல்    21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்



# தொகுதி 2 மொழி


## பாடம் 1 முத்தமிழ்

### செவிமடுத்து உரையாடுக.

மதிப்பிற்குரிய தலைமையாசிரியர் அவர்களே! அன்பிற்கினிய ஆசிரியர்களே! என் சக மாணவர்களே! உங்கள் அனைவருக்கும் என் முதற்கண் வணக்கம். முத்தமிழ் எனும் தலைப்பில் உங்கள் முன் உரையாற்ற வந்துள்ளேன்.

அவையோரே,

இயல், இசை, நாடகம் என்ற பிரிவுகளைக் கொண்ட நம் மொழியை முத்தமிழ் என்று சிறப்பாக அழைக்கின்றோம். செய்யுளும் உரைநடையும் இயற்றமிழ் எனப்படுகிறது. காப்பியங்கள், புராணங்கள், சிறுகதை என்பன இப்பிரிவில் அடங்கும்.



அன்பிற்கினியவர்களே, பண்ணோடு பாடுவது இசையாகும். இராகமும் தாளமும் சேரும்போது இசை மேலும் இனிமையாகும். நாடகத்தைக் கூத்து என்றும் அழைப்பர். நாடகத் தமிழை மன்னர்களும் கூத்தர்களும் வளர்த்தனர்.

அக்காலத்தில் பல நிகழ்ச்சிகளிலும் சிறப்பு நாள்களிலும் நாடகம் நடத்தப்பட்டு வந்தது. கோயில்கள் கலைக் கூடங்களாகத் திகழ்ந்தன. முத்தமிழை வளர்ப்பதில் பலரும் ஆர்வம் காட்டினர்.

அவையோரே,

நமது ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தை முத்தமிழ்க் காப்பியம் என்றும் அழைப்பதுண்டு, ஏனெனில், இக்காப்பியத்தில் பாடல்கள் இடையே உரைநடை, இசையுடன் கூடிய வெண்பாக்களும் உள்ளன.

செவிமடுத்திடுக

### நடவடிக்கை 1

**செவிமடுத்த உரையிலுள்ள முக்கியக் கருத்துகளைக் கூறுக.**

1.4.6 - செவிமடுத்த உரையிலுள்ள முக்கியக் கருத்துகளைக் கூறுவர்.

ஆசிரியர் குறிப்பு:
- உரையைச் செவிமடுக்கப் பணித்தல்.
- உரையிலுள்ள முக்கியக் கருத்துகளை உரையாடுதல்.


வி.வ.கூ: மொழி | உ.சி.தி: மதிப்பிடுதல் | 21ஆம் நூ. தி: தொடர்பு கொள்ளும் திறன்

## பாடம் 2 தொல்காப்பியம்

### வாசித்து அறிக.

தமிழ்மொழியின் சிறப்புக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருப்பது தொல்காப்பியம் எனும் நூலாகும். இந்நூல் நமக்குக் கிடைக்கப்பெற்ற முதல் நூலாகும். இதற்கு முன்னர் பல இலக்கண நூல்கள் இருந்தாலும் இந்நூல் மட்டுமே நிலைத்து நிற்பது இதன் சிறப்பாகும்.


தொல்காப்பியம் அதை எழுதிய ஆசிரியரால் பெயர் பெற்ற நூல் என்றும் கூறப்படுகிறது. தொல்காப்பியர் எழுதியமையால் தொல்காப்பியம் எனப்பட்டது. இந்நூல், எழுத்து, சொல், பொருள் என்ற முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது. இந்நூலானது இருபத்தேழு இயல்களையும், 1602 நூற்பாக்களையும் கொண்டது.




எழுத்ததிகாரம் ஒன்பது இயல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அவை நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல், புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என்பனவாம். இவ்வதிகாரத்தில் எழுத்துகளின் எண்ணிக்கை பிறப்பு, எழுத்துப் பிறப்பதற்குரிய இடங்கள் முதலியன பற்றி விரிவாகக் கூறப்படுகின்றன.

இதனைத் தொடர்ந்து வருவது சொல்லதிகாரம். எழுத்துகளின் தொடர்பில் பிறப்பதுவே சொல்லாகும். இவ்வாறு பிறக்கும் சொற்களின் இலக்கணத்தைக் கூறுவதே சொல்லதிகாரமாகும். இவ்வதிகாரம் ஒன்பது இயல்களை உடையது. மேலும், வட சொல்லைத் தமிழில் எடுத்தாளும்போது, அதற்குரிய ஓசையைத் தமிழ்ப்படுத்தி வழங்க வேண்டும் என்பது தொல்காப்பியரின் கருத்தாகும்.

தமிழ்மொழிக்கே உரிய தனிச்சிறப்புப் பொருள் இலக்கணத்தால் விளங்கும். உலக மொழிகள் எதிலும் இல்லாத தனித்தன்மை இதுவாகும். பொருள் இலக்கணத்தைக் கூறுவதே பொருளதிகாரமாகும். வாழ்விற்குரிய இலக்கணம் வகுத்தவர்கள் தமிழர்கள். வாழ்வை அகம், புறம் என இரு பிரிவுகளாக வைத்தனர். தமிழில், மனிதனின் வாழ்க்கையை உணர்த்தும் பகுதியாக இப்பொருளதிகாரம் விளங்குகின்றது என்பது மறுக்க முடியாத ஒன்றாகும்.



என்னை நுணுகு

**அருஞ்சொற்கள்**

- உறுதுணை
- தன்னகத்தே
- அகம்
- புறம்
- இயல்கள்

## நடவடிக்கை 1

**வாசிப்புப் பகுதியை வாசித்து முக்கியத் தகவல்களைக் கண்டறிந்து உரையாடுக.**

## நடவடிக்கை 2

**வாசிப்புப் பகுதியிலுள்ள முக்கியத் தகவல்களை அடையாளம் கண்டு வாசித்திடுக.**

## நடவடிக்கை 3

**முக்கியத் தகவல்களைச் சிந்தனை வரிப்படத்தின் மூலம் எழுதி வாசித்திடுக.**

**நீ கற்றறிந்த வாசிப்புப் பகுதியில் அடங்கியிருக்கும் தமிழ்மொழி தொடர்பான முக்கியத் தகவல்களைப் பட்டியலிட்டு வாசித்திடுக.**

2.4.10 - வாசிப்புப் பகுதியிலுள்ள முக்கியத் தகவல்களை அடையாளம் காண்பர்.

ஆசிரியர் குறிப்பு:

- வாசிப்புப் பகுதியை வாசிக்கப் பணித்தல்.
- முக்கியத் தகவல்களை அடையாளங்கண்டு கூறச் செய்தல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை    உ.சி.தி: ஆய்வுச் சிந்தனை    21ஆம் நூ. தி: தொடர்புகொள்ளும் திறன்

## பாடம் 3 புதுமைக் கவிஞன்

### வாசித்து எழுதுக.

மதிப்பிற்குரிய தலைமையாசிரியர் அவர்களே! நேசத்திற்குரிய ஆசிரியர்களே! என் சக நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் என் பணிவான வணக்கம். 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' எனும் பாரதியாரின் இனிய வரிகளைக் கூறி எனது உரையைத் தொடங்குவதில் பெருமிதம் கொள்கிறேன்.

அன்புக்குரியவர்களே,
இன்று செப்டம்பர் 11. தமிழுக்கு உயிர்கொடுத்த, தமிழால் உயிர்பெற்ற பாரதியின் நினைவு நாள். இவ்வினிய நாளில் இக்கவிஞனின் புகழைப் பாராட்டி உரை நிகழ்த்த வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.



பாரதியார் என்றாலே சீரிய சிந்தனை! நேரிய பார்வை! வீரிய உணர்வு! பாரிய நோக்கு! எனப் பாராட்டிக் கொண்டே போகலாம். பொழியும் மழை நீருக்கு ஒரு கடமை இருப்பதைப் போல, எரியும் நெருப்புக்கு ஒரு கடமை இருப்பதைப் போல, வீசும் காற்றுக்கு ஒரு கடமை இருப்பதைப் போல, தமக்கும் ஒரு கடமை இருக்கிறது என்பதை நன்கு உணர்ந்து செயல்பட்டவரே பாரதியார்.

காலம் தந்த கவிஞனும் காலத்தை வென்ற கவிஞனும் இவர்தான் என்றால் அது மிகையாகாது. தமிழிலே ஒரு பெரிய மறுமலர்ச்சியையும் தமிழருக்கு ஒரு விழிப்புணர்ச்சியையும் இலக்கிய வானில் சுடர்விடச் செய்தவர்.

அவையோரே,
இளமையிலேயே கவி புனையும் ஆற்றலைப் பெற்றிருந்தார் பாரதி. அச்சில் வந்த இவரது முதல் கவிதை தனிமை இரக்கம் என்பதாகும். தொடர்ந்து பெண், கல்வி, தேச விடுதலை, பகுத்தறிவு, மனித சமத்துவம் ஆகிய துறைகளில்

பாடல்களை எழுதிக் குவித்தார். பாரதியார் வெறும் கற்பனைவாதி மட்டும் அல்லர். நவீன கால அறிவின் நுட்பங்களை வெளியிடுவதற்கு மொழியை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதையும் தமது கவிதை மூலம் நிறுவினார்.




மாணவர்களே,
பண்டிதர்களின் பிடியில் அடங்கிக் கிடந்த தமிழைக் கோபத்தோடு பொதுமைப்படுத்தியது இவரின் மற்றொரு சேவையாகும். எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி! என எல்லோரையும் உணர்வோடும் உரிமையோடும் மொழியின் மீது பற்றுக் கொள்ளச் செய்த முதற்புலவனும் பாரதியே.

மொழிக்குத் தம்மை முழுமையாக அர்ப்பணித்த பாரதியார் 1921ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். பாரதியார் எழுதிய நூல்கள் அனைத்தும் உயிர்பெற்று வாழ வேண்டுமாயின் நாம் அனைவரும் அந்நூல்களை வாங்கி வாசித்துப் பயனுற வேண்டுமெனக் கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி பாராட்டி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

## நடவடிக்கை 1

**கொடுக்கப்பட்ட தலைப்புகளில் பாராட்டுரை எழுதிடுக.**

1. பதவி உயர்வு பெற்ற ஆசிரியரைப் பாராட்டி உரை எழுதிடுக.
2. ‘பாரதி விருது’ பெற்ற பள்ளியின் சிறந்த மாணவனைப் பாராட்டி உரை எழுதிடுக.
3. தேசிய அளவில் புத்தாக்கப் படைப்பு எனும் போட்டியில் வெற்றி பெற்ற மாணவனைப் பாராட்டி உரை எழுதிடுக.

**அருஞ்சொற்கள்**

- அளித்த
- கடமை
- சுடர்
- கற்பனை
- உரிமை

3.6.15 - 100 சொற்களில் பாராட்டுரை எழுதுவர்.


ஆசிரியர் குறிப்பு:

- பாராட்டுரையைத் தக்க தொனியுடன் பிழையற வாசிக்கச் செய்தல்.
- பாராட்டுரையை முறையாக எழுதப் பணித்தல்.

வி.வ.கூ: மொழி | உ.சி.தி: பயன்படுத்துதல் | 21ஆம் நூ. தி: சிந்தனையாளர்

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## திருக்குறளையும் பொருளையும் அறிக.



## திருக்குறளும் பொருளும்

- **தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்**. (202)

- தீய செயல்கள் தீமையை விளைவிக்கும் தன்மையை உடையனவாக இருக்கின்றன. ஆதலால், நெருப்புக்கு அஞ்சுவதைக் காட்டிலும் தீங்கு செய்வதற்கு அதிகம் அஞ்ச வேண்டும்.

### நடவடிக்கை 1

**திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து மனனம் செய்து கூறுக; எழுதுக.**

**தகவல் கூடம்**

- பட்டினம் - துறைமுகத்தோடு கூடிய நகரம்.
- பட்டணம்-துறைமுகம் இல்லாத நகரம்

### நடவடிக்கை 2

**திருக்குறளுக்கேற்ற ஒரு சூழல் அல்லது கதையை உருவாக்கிக் கூறுக.**

### நடவடிக்கை 3

**திருக்குறளுக்கு ஏற்பக் கதையை எழுதி முடித்திடுக.**

கனிமொழியும் திலகவதியும் பள்ளி மாணவர் தலைவர்கள். இருவரும் ஓய்வு நேரத்தில் நூலகத்திற்குச் சென்று புத்தகங்களை வாசிப்பர். ஒரு நாள், வழக்கம் போல் அவர்கள் இருவரும் நூலகம் சென்றனர். உள்ளே நுழைந்த இருவரும் அதிர்ச்சியடைந்தனர்.

4.3.5 - ஐந்தாம் ஆண்டுக்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு:
- உரைநடைப் பகுதியைப் பாகமேற்று வாசிக்கப் பணித்தல்.
- திருக்குறளையும் பொருளையும் அறிந்து நடவடிக்கைகளைச் செய்யக் கூறுதல்.

வி.வ.கூ: நன்னெறிப் பண்பு | உ.சி.தி: கட்டுவியம் | 21ஆம் நூ. தி: கொள்கையுள்ளவர்

# பாடம் 5 இலக்கணம்


## இடைச்சொற்கள் அறிக.


### அல்லது, உம்





- பெயர்ச்சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் இடையில் அல்லது முன்னும் பின்னும் இருந்து பொருளை விளக்கும் சொல் இடைச்சொல் எனப்படும்.
- இவற்றால் தனித்து நிற்க இயலா.
- இடைச்சொற்களுள் வாக்கியங்களைக் கருத்தால் இணைக்கப் பயன்படுபவை **இணைப்பிடைச் சொற்கள்** என்று அழைக்கப்படும்.





**எடுத்துக்காட்டு:**

- உன் அப்பா அல்லது அம்மாவை நாளை பள்ளிக்கு அழைத்து வா.
- அம்மாவும் நானும் சந்தைக்குச் சென்று காய்கறிகள் வாங்கினோம்.

## நடவடிக்கை 1

**அல்லது, உம் என்ற இடைச்சொற்களைப் பொருத்தமான இடத்தில் எழுதுக.**

அப்பா ______ அம்மா ______ தம்பியை அழைத்துக் கொண்டு மகிழுந்தில் சென்றனர். மூவர் ______ கிராமத்தில் உள்ள பாட்டியின் வீட்டிற்குச் சென்றனர். அக்காள் ______ நானும் வீட்டில் இருந்தோம். இரவு உணவை வெளியில் வாங்கிக் கொள்ளலாமா ______ வீட்டில் சமைக்கலாமா என அக்காள் கேட்டாள். நாங்கள் இருவர் ______ வீட்டுச் சமையலைத்தான் விரும்புவோம். எனவே, நாங்கள் கடைக்குச் சென்றோம். சில காய்கறிகள் ______ வஞ்சிரம் மீன் ______ வாங்கி வந்தோம். மீனைப் பொரிக்கலாமா ______ கறி சமைக்கலாமா என நான் கேட்டேன். இறுதியில் நான் ______ அக்காள் ______ மீனைப் பொரித்து உண்டுகளிக்கத் திட்டமிட்டோம்.



5.3.23 - அல்லது, உம் ஆகிய இடைச்சொற்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு:

- அல்லது, உம் என்ற இடைச்சொற்களை எழுதி வாசிக்கச் செய்தல்.
- சரியான இடத்தில் எழுதி வாசிக்கச் செய்தல்.


வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை உ.சி.தி: பயன்படுத்துதல் 21ஆம் நூ. தி: தகவல் நிறைந்தவர்

# தொகுதி 3

## சுற்றுச்சூழல்

### பாடம் 1 பசுமை நாடுவோம்

**உரையாடுக.**




### நடவடிக்கை 1

**வினாச் சொற்களைப் பயன்படுத்திக் கேள்விகள் கேட்டிடுக.**

1.6.6 - விவரங்கள் சேகரிக்கப் பொருத்தமான வினாச் சொற்களைப் பயன்படுத்திக் கேள்விகள் கேட்பர்.

ஆசிரியர் குறிப்பு:

- விவரங்கள் பெறப் பொருத்தமான வினாச் சொற்களைப் பயன்படுத்தப் பணித்தல்.
- சூழலைப் பார்த்து விளக்கம் பெற ஊக்குவித்தல்.

வி.வ.கூ: சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் உ.சி.தி: பயன்படுத்துதல் 21ஆம் நூ. தி: குழுவாகச் செயல்படுத்தல்

# பாடம் 2 தூய்மை காப்போம்

## வாசித்து அறிக.

நம்மைச் சுற்றியுள்ள உயிருள்ள பொருள்களையும் உயிரற்ற பொருள்களையும் உள்ளடக்கியதே சுற்றுச்சூழல் எனப்படும். மனிதர்களும் பிற உயிரினங்களும் ஆரோக்கியமாக வாழ்வதற்குச் சீரான சுற்றுச்சூழல் அடித்தளமாகும்.



நாம் போற்றும் சுற்றுச்சூழல் இயற்கையாகவும் மனிதர்களின் பொறுப்பற்ற செயல்களினாலும் மாசு அடைகின்றது. இயற்கையாக ஏற்படும் தூய்மைக்கேடு மனித வாழ்வில் பல தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. ஆனாலும், அது மீண்டும் சீராகும் ஆற்றல் கொண்டது எனலாம். மனித செயல்களினால் உண்டாகும் தூய்மைக்கேடுதான் மிகக் கொடூரமானது எனக் கூறப்படுகிறது. இது பல இன்னல்களைத் தொடர்ச்சியாகத் தருவதாகும்.



மக்கள் தொகைப் பெருக்கமும் தொழில்நுட்ப வளர்ச்சியும் இதற்கு மூலம் எனலாம். இவ்வாறு ஏற்படும் சுற்றுச்சூழல் தூய்மைக்கேடுகளை நிலம், நீர், காற்று, ஒலி, வெப்பம் எனப் பலவகையாகப் பிரிக்கலாம். மனிதர்கள் உயிர்வாழ முக்கியத் தேவையாக விளங்கும் காற்று, பல காரணங்களால் மாசு அடைகின்றது.



எரிமலை வெடித்தல், காடுகள் தீப்பற்றி எரிதல் ஆகியவற்றால் தூசு, புகை, சாம்பல் போன்றவை காற்றில் கலந்துவிடுகின்றன. இதனால், உயிரினங்களுக்குச் சுவாசக் கோளாறு, தோல் வியாதிகள் போன்றவை ஏற்படுகின்றன.

மனிதர்களின் நடவடிக்கைகளாலும் காற்றுத் தூய்மைக்கேடு அடைகின்றது. தொழிற்சாலைகள், வாகனங்கள் போன்றவற்றிலிருந்து வெளியேற்றப்படும் புகை காற்று மண்டலத்தைப் பெரிதும் பாதிக்கின்றது. இக்காரணத்தினால், வானிலை மாற்றம், பசுமையில்லா நிலை, புகை மூட்டம், உடல்நலச் சீர்கேடுகள், தாவரங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

நாம் இயல்பான வாழ்க்கை வாழ இயற்கையை நேசிக்க வேண்டும். மாசுபடாத பூமியில் வாழ நாம் அனைவரும் பொறுப்புடன் செயல்படுவது அவசியமாகும். சுற்றுச்சூழலைப் பசுமையாக்கப் பாடுபட வேண்டும். அப்போதுதான் இயற்கை அன்னை நம்மை நேசிப்பாள்.

## நடவடிக்கை 1

**வினாச் சொற்களைப் பயன்படுத்திக் கேள்விகள் கேட்டுத் தகவல்களைப் பெறுக.**

## நடவடிக்கை 2

**பெறப்பட்ட தகவல்களைக் குழு முறையில் கலந்துரையாடி வகைப்படுத்துக.**

## நடவடிக்கை 3

**வகைப்படுத்திய தகவல்களைப் பொருத்தமான வரிப்படத்தில் எழுதிக் காட்டுக.**

### அருஞ்சொற்கள்

- சீரான
- மாசுபாடு
- இன்னல்கள்
- கோளாறு
- நேசித்தல்

2.4.11 - வாசிப்புப் பகுதியிலுள்ள தகவல்களை வகைப்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு:

- வாசிப்புப் பகுதியைத் தக்க தொனியுடன் வாசிக்கப் பணித்தல்.
- தகவல்களை வகைப்படுத்திக் கூறச் செய்தல்.

வி.வ.கூ: சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல்
உ.சி.தி: சீர்தூக்கிப் பார்த்தல்
21ஆம் நூ. தி: குழுவாகச் செயல்படுதல்

# பாடம் 3 சுற்றுச்சூழல் பாதுகாப்பு

## வாசித்து எழுதுக.






சுற்றுச்சூழலை நேசித்தல் - கருத்தரங்குகள் - விழிப்புணர்வு - நடவடிக்கைகளை அதிகப்படுத்துதல்.

கல்வி நிறுவனங்கள் - சுற்றுச்சூழல் பாதுகாப்புப் போதனை - நடத்துதல்

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வழிகள்






சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டங்கள் - வலியுறுத்துதல் - தண்டனை

நெகிழிப் பயன்பாட்டைத் தவிர்த்தல் - மரக்கன்றுகள் நடுதல் - ஊக்குவித்தல்

## நடவடிக்கை 1

**கொடுக்கப்பட்ட குறிப்புகளைக் கொண்டு 100 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை ஒன்றனை எழுதுக.**

## நடவடிக்கை 2

**குறிப்புகளைத் துணையாகக் கொண்டு 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' எனும் தலைப்பில் கருத்து விளக்கக் கட்டுரை ஒன்றனை எழுதுக.**

- சுற்றுச்சூழல் சுத்தத்தின் பாதுகாப்பை அறிதல்.
- வீட்டிலிருந்து சுத்தத்தைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தல்
- மரக்கன்றுகள் நடுதல், செடி நடுதல் போன்ற மகிழிகளில் ஈடுபடுதல்.
- பள்ளியில் கூட்டுப்பணி, விழிப்புணர்வு நடவடிக்கைகள், போட்டிகள் நடத்துதல்.

**தகவல் கூடம்**

- உலகத் தூய்மை நாள் செப்டம்பர் 19.
- உலகின் மிகப் பெரிய காடு, அமேசான்.
- உலக வறுமை ஒழிப்பு நாள் நவம்பர் 1.

## நடவடிக்கை 3

**படங்களைத் துணையாகக் கொண்டு கருத்து விளக்கக் கட்டுரை ஒன்றனை எழுதுக.**





3.6.12 - 100 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு:

- குறிப்புகளை வாசித்து உரையாடச் செய்து கருத்துகளை அறிதல்.
- கருத்து விளக்கக் கட்டுரையை எழுதி வாசிக்கப் பணித்தல்.

வி.வ.கூ: சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் | உ.சி.தி: சீர்தூக்கிப் பார்த்தல் | 21ஆம் நூ. தி: கொள்கையுள்ளவர்

## பழமொழிகளையும் பொருளையும் அறிக.



குரு ஒருவரிடம் இரு மாணவர்கள் வில் வித்தையைப் பயின்றனர். சில மாதங்களுக்குப் பிறகு தமது மாணவர்களின் ஆற்றலைச் சோதிக்க குரு எண்ணினார்.

ஒருநாள் இரண்டு மாணவர்களையும் அருகிலுள்ள மலைப்பகுதிக்கு அழைத்துச் சென்றார். காட்டுப் பாதை கரடுமுரடாக இருந்தது. ஆங்காங்கே ஆழமான குழிகளும் இருந்தன. மூவரும் மலைப்பகுதியை நெருங்கினர். ஓரிடத்தில் குரு நின்று தமது மாணவர்களை அருகில் அழைத்தார். “மாணவர்களே, இங்கே இரண்டு குழிகள் உள்ளன. நீங்கள் இருவரும் ஆளுக்கொரு குழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். அருகிலுள்ள குளத்தில் நீரை அள்ளிக் கொண்டு வந்து இக்குழிகளை நிரப்புங்கள்,” என்றார்.

குரு கூறியது போலவே இருவரும் செயல்பட்டனர். ஆனால், கையால் அள்ளி வந்து நீரை நிரப்ப முடியவில்லை. பல தடவை முயற்சி செய்து, தோல்வியே கண்டனர். இருவரில் ஒருவன் சோர்ந்து அமர்ந்தான். மற்றொருவன் சுற்றும் முற்றும் பார்த்து, சற்று யோசித்தான். “**மனம் உண்டானால் மார்க்கம் உண்டு** என்பர். தொடர்ந்து முயற்சி செய்யுங்கள் மாணவர்களே! ” என்று குரு ஊக்கம் கொடுத்தார்.

சோர்ந்த மாணவன் முயற்சியைக் கைவிட்டான். மற்றொருவனோ சட்டெனத் தனது வில்லிலிருந்து அம்பை எடுத்து அருகிலுள்ள மரத்தின் கிளையில் எய்தான். கிளையில் இருந்த தேன் கூட்டில் அம்பு பாய்ந்தது. தேன் வடிய ஆரம்பித்தது. மாணவன் ஓடிச் சென்று கைகளைத் தேன்சொட்டுகளால் நனைத்தான். சற்று நேரத்தில் குளத்து நீரை அள்ளி வந்து குழியை நிரப்பினான்.


குரு அம்மாணவனைப் பார்த்து, “உன் கைகளில் அள்ளப்பட்ட நீர் கீழே சிந்தவில்லையே! எப்படி,” என்றார். “தேனைத் தொட்டு நனைத்ததால் என் கைவிரல்கள் ஒட்டிக் கொண்டன. அதனால், மிகவும் சுலபமாக நீரை அள்ளி நிரப்பினேன்,” என்றான் மாணவன். **புத்திமான் பலவான்** என்பது போலத் தம் மாணவன் அறிவாளி மட்டுமல்ல, ஆற்றல் மிகுந்தவனும் கூட என எண்ணி மகிழ்ந்தார். மேலும், **வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்** எனும் பழமொழிக்கேற்பத் தம் மாணவன் சாதித்து விட்டான் என மனதாரப் பாராட்டினார்.

## பழமொழியும் பொருளும்

- **மனம் உண்டானால் மார்க்கம் உண்டு.**
  - ஒரு செயலைச் செய்து முடிக்க முடியும் என மனவுறுதி கொண்டால் அதனைச் செய்யும் வழிகளும் தானாகப் பிறக்கும்.
- **புத்திமான் பலவான்.**
  - அறிவாளியாக இருப்பவனே ஆற்றல் மிக்கவனாகத் திகழ்வான்.
- **வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.**
  - திறமைசாலி தன் ஆற்றலால் அற்பப் பொருளையும் கொண்டு ஒரு காரியத்தைச் சாதித்துக் கொள்வான்.

## நடவடிக்கை I

**கொடுக்கப்பட்ட படத்தைப் பார்த்துப் பழமொழிகளைப் பயன்படுத்தி இக்கதையினைக் கூறுக.**



### அருஞ்சொற்கள்

- தெளிவு
- வறண்டு
- நெஞ்சார
- நிரூபித்து
- மனமார

4.7.5 - ஐந்தாம் ஆண்டுக்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு:

- கதையை வாசித்துப் பழமொழிகளின் பொருளை அறிதல்.
- பழமொழிகளையும் பொருளையும் அறிந்து குழுவில் உரையாடச் செய்தல், நடவடிக்கையைச் செய்வித்தல்.

வி.வ.கூ: நன்னெறிப் பண்பு | உ.சி.தி: மதிப்பிடுதல் | 21ஆம் நூ. தி: கொள்கையுள்ளவர்

# பாடம் 5 இலக்கணம்

## இடைச்சொற்கள் அறிக.

அதற்காக | எனினும் | என்றாலும்

எடுத்துக்காட்டு:

1. யாழினி கூடைப்பந்துப் போட்டியில் பங்கேற்க எண்ணம் கொண்டாள். **அதற்காக**, ஒவ்வொரு நாளும் பயிற்சியை மேற்கொண்டாள்.



2. சுடர்மதி பள்ளிச் சுற்றுலா செல்ல ஆர்வம் கொண்டாள். **எனினும்**, அவளின் பெற்றோர் அவளை அனுமதிக்கவில்லை.



3. மால்மருகன் கலகலப்பானவன். **என்றாலும்**, நண்பர்களைத் தேர்ந்தெடுத்தே பழகுவான்.



## நடவடிக்கை 1

**பொருத்தமான இடைச்சொற்களை எழுதுக.**

1. அப்பாவும் அண்ணனும் பேரங்காடிக்குச் சென்றனர். __________, எந்தப் பொருளையும் வாங்கவில்லை.
2. கவியழகன் மொழியாற்றல் மிக்கவன். __________, போட்டியில் முதல் நிலையை அடையவில்லை.
3. குமுதினி பாடும் திறன் போட்டியில் வெற்றி பெற உறுதி கொண்டாள். __________, நாளும் இசை வகுப்பிற்குச் செல்கிறாள்.
4. மாணவர்கள் பள்ளியில் பாடங்களைப் படிக்கின்றனர். __________, வீட்டிலும் அவற்றை மீள்பார்வை செய்ய வேண்டும்.
5. அபிராமி தினமும் உடற்பயிற்சி செய்கிறாள். __________, அவளின் உடல் இன்னும் பருமனாகவே இருக்கிறது என வருந்தினாள்.

5.3.21 - என்றாலும், எனினும், அதற்காக, இன்னும், மேலும் ஆகிய இடைச்சொற்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு:


- எடுத்துக்காட்டு வாக்கியங்களை வாசிக்கச் செய்தல்.
- பொருத்தமான இடைச்சொற்களை எழுதி வாக்கியங்களைப் பூர்த்தி செய்யப் பணித்தல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை    உ.சி.தி: பகுத்தாய்தல்    21ஆம் நூ. தி: தாங்கும் வலிமை

# தொகுதி 4 சமூகவியல்

## பாடம் 1 ஒன்றுபடுவோம்

### கலந்துரையாடுக.




### நடவடிக்கை 1

**கொடுக்கப்பட்ட தலைப்புகளுக்குப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசுக.**

1.7.19 - தலைப்பிற்குப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசுவர்.


ஆசிரியர் குறிப்பு:

- தலைப்பிற்கு ஏற்பச் சூழல் படங்களைப் பார்த்து உரையாடப் பணித்தல்.
- பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசப் பணித்தல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை   உ.சி.தி: சீர்தூக்கிப் பார்த்தல்   21ஆம் நூ. தி: அன்பானவர்/ பரிவுள்ளவர்

## பாடம் 2 விழுவது எழுவதற்கே

### வாசித்து அறிக.



சின்ன குழந்தை நடை பழகும் நேரத்தில் தட்டுத் தடுமாறிக் கீழே விழுவதைப் பார்த்து எவரும் எள்ளி நகையாடுவதில்லை. ஏனென்றால், அந்தக் குழந்தை விழுந்ததும் உடனே எழுந்துவிடும். அப்படி விழும் குழுந்தையைப் பார்த்துக் கேலி செய்தாலும் அது கண்டுகொள்ளாமல் மீண்டும் தொடர்ந்து நடக்கவே துணியும்.


வயதானவுடன் மனிதர்களிடம் பலவகை மாற்றங்கள் தோன்றுகின்றன. சிறிய சரிவுக்குக்கூட பிறர் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்களோ என்றுதான் கவலைப்படுவர். ஆனால், உண்மை நிலை என்னவென்றால், யாருக்கும் பிறரைக் கவனிக்கவோ கவலைப்படவோ நேரம் கிடையாது.

தோல்வி என்பது கீழே விழுவது போன்றது. இதை அறிந்தவனே புத்திசாலி. வெற்றிக் கனவுக்கு முற்றுப்புள்ளியல்ல தோல்வி. இதுவும் நம் வாழ்க்கைப் பயணத்தில் ஒரு பகுதி என்பதில் தெளிவாக இருப்பான். ஒவ்வொரு தோல்வியும் ஒரு புதிய படிப்பினை என்று ஏற்றுக் கொள்பவனே அறிவாளி. தோல்வியிலிருந்து மீளாமல் அதிலேயே விழுந்து கிடக்கும்போதுதான் மனிதன் உண்மையான தோல்வி அடைகின்றான்.

மின்குமிழ் கண்டுபிடிக்க எடிசன் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பரிசோதனை முயற்சிகள் செய்து பார்த்து இறுதியில் வெற்றியடைந்தார். இதைப் பற்றி அவருடைய நண்பர் கேட்டபோது, “அவற்றை எல்லாம் தோல்வி என்று சொல்லக்கூடாது. அந்த ஆயிரம் வழிகளிலும் மின்குமிழ் செயல்படாது என்பதை அறிந்து கொண்டேன்,” என்றார் எடிசன். ஆம், இதுவே நேர்மறைச் சிந்தனையாகும்.

தோல்விகளைக் கண்டு அயராத இன்னொரு ஆளுமை ஆபிரகாம் லிங்கன். இவரைத் ‘தோல்விகளின் குழந்தை’ என்று சொல்வார்கள். ஏனெனில், அவர் தமது 22ஆவது வயது முதல் 49ஆவது வயது வரை பல துறைகளில் தோல்வி கண்டவர். இருப்பினும், தமது 52ஆவது வயதில் அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்று அதிபரானார்.

எனவே, வெற்றியை மட்டுமே இலக்காக வைத்து வீழ்வது தோல்வியல்ல என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ளுங்கள். வெற்றி நிச்சயம்.



என்னை நுணுகு

## நடவடிக்கை 1

**கருத்துணர் கேள்விகளுக்கு விடையளித்திடுக.**

1. சின்ன குழந்தைகள் விழுவதை ஏன் பிறர் நகைப்பதில்லை?
2. புத்திசாலிகள் எண்ணம் எவ்வாறு இருக்கும்?
3. உண்மையான தோல்வி எனக் கூறப்படுவது யாது?
4. எடிசன் தமது தோல்விகளைப் பற்றிக் கூறும் நேர்மறை எண்ணங்கள் யாவை?
5. தோல்விகளின் குழந்தை எனப் பெயர் பெற்றவர் யார்? ஏன்?

### தகவல் கூடம்

- தொலைக்காட்சியைக் கண்டுபிடித்தவர் ஜான் லூகல் பேய்ட்.
- தொடர்வண்டியைக் கண்டுபிடித்தவர் - ஜார்ஜ் ஸ்டீபென்சன்.
- வானூர்தியைக் கண்டுபிடித்தவர்கள் ரைட் சகோதரர்கள்.

நேர்மறை எண்ணங்கள் உனது வளர்ச்சிக்கு எவ்வாறு உதவும்?

2.6.8 - சமூகவியல் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

ஆசிரியர் குறிப்பு:

- உரைநடைப் பகுதியைச் சரியான உச்சரிப்புடன் வாசிக்கப் பணித்தல்.
- கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிக்கப் பணித்தல்.

வி.வ.கூ: அறிவியலும் தொழில்நுட்பமும் உ.சி.தி: ஆய்வுச் சிந்தனை 21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

## வாசித்து எழுதுக.




## நடவடிக்கை 1

**பண்டிகை தொடர்பான தலைப்பையொட்டி வாக்கியங்கள் அமைத்திடுக.**

3.4.18 - தலைப்பையொட்டி வாக்கியம் அமைப்பர்.

ஆசிரியர் குறிப்பு:

- பண்டிகைகள் எனும் தலைப்பையொட்டிக் குழு முறையில் உரையாடச் செய்தல்.
- முழுமையான வாக்கியங்கள் அமைத்து எழுதச் செய்தல்.

விி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை    உ.சி.தி: கட்டுவியம்    21ஆம் நூ. தி: குழுவாகச் செயல்படுதல்

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

### உலகநீதியையும் பொருளையும் அறிக.

**காலை மணி 6:00**


குடும்பத்தினர் அனைவரும் என்னை அனைத்துலக வானூர்தி நிலையத்திற்கு அனுப்பி வைத்தனர். அரசாங்க உதவித்தொகை பெற்று மேற்படிப்பிற்கு இங்கிலாந்து செல்கிறேன். என் கனவு மெய்ப்படுகிறது என்று எனக்குள் மகிழ்ச்சி கொண்டேன்.

**காலை மணி 8:00**

வானூர்தியினுள் அமர்ந்தேன். இன்னும் சற்று நேரத்தில் வானூர்தி வானில் பறக்கும். என் பெற்றோர் கூறிய அறிவுரைகளை என் மனம் ஒவ்வொன்றாக அசை போட்டது. **மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்** என்றும், நோக்கம் எதுவோ அதில் மட்டும் கண்ணுங்கருத்துமாக இருக்க வேண்டும் என்று அம்மா கூறிய அறிவுரைகளை நினைவு கூர்ந்தேன்.

**இரவு மணி 9:00**

வானூர்தியில் அறிவிப்பு. இன்னும் சற்று நேரத்தில் தரையிறங்கப் போகிறோம். புதிய இடம், புதிய சூழல், புதிய நண்பர்கள். நண்பர்களைத் தேடுவதில் மிகுந்த கவனம் தேவை என அப்பா கூறிய அறிவுரையை நினைத்துப் பார்த்தேன். தோழர்கள், பகைவர்கள் எனப் பலரையும் சந்திக்க நேரிடும். என்றென்றும் **மாற்றானை யுறவென்று நம்ப வேண்டாம்** என்று அப்பா கண்டிப்பாகக் கூறி இருந்தார். கை உடைமைகளைச் சரிபார்த்துக் கொண்டேன். சற்று நேரத்திற்குப் பிறகு நான் முதன்முறையாக இங்கிலாந்தில் காலடி எடுத்து வைத்தேன்.



இரவு மணி 11:00

எனக்குத் தெரிந்தவர்கள் யாராவது இங்கு இருப்பார்களா என்று சுற்றும் முற்றும் பார்த்தேன். தனியாக இந்நாட்டில் மேற்படிப்பைத் தொடர்வது சிக்கலாக இருக்காது என்று மனம் கூறுவது போல் உணர்ந்தேன். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் செய்யுள் அடிகள் என் நினைவுக்கு வந்தது.

தோளை யாரோ தட்டியதை உணர்ந்தேன். இடைநிலைப் பள்ளியில் படித்த நண்பர்கள் இருவரைக் கண்டு அளவிலா மகிழ்ச்சி கொண்டேன்.

## உலகநீதியும் பொருளும்

- **மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்.**
  - மனம் செல்லும் வழியெல்லாம் செல்ல வேண்டாம்.

- **மாற்றானை யுறவென்று நம்ப வேண்டாம்.**
  - பகைவன் உறவு கொண்டாலும் அவனை நம்பக்கூடாது.

### நடவடிக்கை 1

**உலகநீதியையும் அதன் பொருளையும் அறிந்து கூறுக. அதன் பொருளை அழகிய கையெழுத்தில் எழுதுக.**

### நடவடிக்கை 2

**உலகநீதிக்குப் பொருத்தமான கதை அல்லது சூழல் ஒன்றனை உருவாக்கி எழுதுக; குழுவில் வாசித்துக் காட்டுக.**

### நடவடிக்கை 3

**உலகநீதி வரிகளைப் பயன்படுத்திப் பொருத்தமான உரையாடல் ஒன்றனை எழுதி வாசித்துக் காட்டுக.**



4.9.3 - ஐந்தாம் ஆண்டுக்கான உலகநீதியையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு:

- நாள் குறிப்பினை வாசித்து விவரங்களைக் கூறப் பணித்தல்.
- உலகநீதியையும் பொருளையும் அறிந்து நடவடிக்கைகளைச் செய்யப் பணித்தல்.

வி.வ.கூ: ஆக்கமும் புத்தாக்கமும் உ.சி.தி: சீர்தூக்கிப் பார்த்தல் 21ஆம் நூ. தி: கொள்கையுள்ளவர்

# பாடம் 5 இலக்கணம்

## நேர்க்கூற்று, அயற்கூற்று அறிக.

அ. நேர்க்கூற்று

- ஒருவர் கூறியதை அவர் கூறியவாறே கூறுவது.
- நேர்க்கூற்றில் ஒருவர் கூறியவற்றை இரட்டை மேற்கோள் குறியிட்டுக் காட்ட வேண்டும்.

**எடுத்துக்காட்டு:**

I. "**நான்** என் வீட்டை விற்கப் **போகிறேன்**," என்று இளமாறன் கூறினான்.

ஆ. அயற்கூற்று

- நேர்க்கூற்றிலுள்ள சொற்களை மட்டும் மாற்றிப் பொருள் மாறாதவாறு படர்க்கை இடத்திற்கு ஏற்பக் கூறுவது.
- அயற்கூற்றில் இரட்டை மேற்கோள் குறி இடப்படுவதில்லை.

**எடுத்துக்காட்டு:**

I. **தன்** வீட்டை விற்கப் **போவதாக** இளமாறன் கூறினான்.

- நேர்க்கூற்றை அயற்கூற்றாக மாற்றும் போதும் அயற்கூற்றை நேர்க்கூற்றாக மாற்றும் போதும் ஏற்படும் மாற்றங்களைக் கீழ்க்காணும் அட்டவணை காட்டுகிறது.


| நேர்க்கூற்று | அயற்கூற்று |
|---|---|
| நான் | அவன்/அவள்/ அவர் |
| நாங்கள் | தாங்கள்/ அவர்கள் |
| என் | தன்/ தம் |
| எங்கள் | தங்கள்/ அவர்கள் |
| நீ | நான்/அவள்/ அவன் |
| நீங்கள் | நாங்கள்/ அவர்கள் |
| உன் | என்/தம் |
| உங்கள் | அவன்/அவள்/ எம்/ தம்/ அவர்கள் |


| நேர்க்கூற்று | அயற்கூற்று |
|---|---|
| இங்கு | அங்கு |
| இந்த | அந்த |
| இவன் | அவன் |
| இது | அது |
| இவை | அவை |
| இன்று | அன்று |
| இப்பொழுது | அப்பொழுது |
| இதனால் | அதனால் |
| நாளை | மறுநாள் |
| நேற்று | முன்னாள் |

## நடவடிக்கை 1

**நேர்க்கூற்றை அயற்கூற்றாக மாற்றி எழுதுக.**

1. "தம்பி தலைவலியால் அழுதான்," என்று அக்காள் கூறினாள்.
2. "அம்மாவும் அப்பாவும் பட்டணத்திற்குச் சென்றுவிட்டனர்," என்று அண்ணன் கூறினார்.
3. "நீங்கள் அனைவரும் முயற்சியுடன் கல்வி கற்க வேண்டும்," என்று ஆசிரியர் மாணவர்களிடம் கூறினார்.
4. "நீங்கள் அனைவரும் மண்டபத்திற்குள் வந்து அமருங்கள்," என்று திருமதி விமலா வருகையாளர்களை அழைத்தார்.
5. "இந்துமதி நாளை நாம் இருவரும் நூலகத்திற்குச் செல்வோம்," என்று கமலா கூறினாள்.







## நடவடிக்கை 2

**அயற்கூற்று வாக்கியங்களை நேர்க்கூற்றாக எழுதுக.**

1. ஆசிரியர் மாணவர்களை நீதிக்கதைகள் கூறும்படி பணித்தார்.
2. தங்கை தன் பணம் தொலைந்து போனதாகக் கூறி அழுதாள்.
3. தன் தோட்டத்தில் விளைந்த காய்கறிகளை விற்பனைக்குக் கொண்டு செல்வதாகப் பார்கவி கூறினாள்.
4. பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துமாறு பிரதமர் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.
5. யாழினி தோழியிடம் தான் வாங்கிய கதைப் புத்தகத்தைக் கொண்டு வருவதாகக் கூறினாள்.







5.4.8 - நேர்க்கூற்று, அயற்கூற்று வாக்கியங்களை அறிந்து கூறுவர்; எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு:

- நேர்க்கூற்று, அயற்கூற்று வாக்கியங்களை அறியச் செய்தல்.
- நடவடிக்கைகளைப் பிழையறச் செய்யப் பணித்தல்.


வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை     உ.சி.தி: பயன்படுத்துதல்     21ஆம் நூ. தி: தொடர்பு கொள்ளும் திறன்

தொகுதி 5

# அனுபவங்கள்

## பாடம் 1 சிந்திப்போம்! தீர்வு காண்போம்!

### உரையாடுக.




### நடவடிக்கை 1

**பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திச் சிக்கலுக்குத் தீர்வு கூறுக.**

1.7.20 - பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திச் சிக்கலுக்குத் தீர்வு கூறுவர்.

ஆசிரியர் குறிப்பு:


- பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்தித் தீர்வு காணப் பணித்தல்.
- படங்களைப் பார்த்து விளக்கம் பெறச் செய்தல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை    உ.சி.தி: சிக்கல் அடிப்படையிலான கற்றல்    21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

# பாடம் 2 சந்தையில் ஒரு நாள்

## உரையாடலை ஏற்ற தொனியுடன் வாசித்திடுக.

சிகரனும் வள்ளியும் தங்களின் தாயாருடன் சந்தைக்குச் சென்றனர்.



அம்மா : நீங்கள் இருவரும் காய்கறிகளை விரும்பி உண்பது எனக்கு மிகவும் பெருமையாக உள்ளது. இப்பொழுதெல்லாம் சிறுவர்கள் காய்கறிகளை விரும்பி உண்பது மிகவும் குறைந்துவிட்டது.

சிகரன் : எங்கள் ஆசிரியர் முறையான உணவுப் பழக்கத்தை அடிக்கடி வலியுறுத்துவார் அம்மா. பசுமையான காய்கறிகளும் கீரைகளுமே நோயை விரட்டும் ஆற்றல் கொண்டவை என அடிக்கடி கூறுவார்.

அம்மா : சிறந்த அறிவுரை. சரி வாருங்கள். உங்கள் இருவருக்கும் பிடித்த காய்கறிகளை வாங்கிக் கொண்டு பழங்கள் விற்கும் பகுதிக்குச் செல்வோம்.

வள்ளி : அம்மா, நீங்கள் கொண்டு வந்துள்ள கூடையிலேயே அனைத்தையும் போட்டுக் கொள்வோம். நெகிழிப் பைகளின் பயன்பாட்டைக் குறைக்க நாமும் செயல்படுவோம்.

அம்மா : மிகச் சரியாகச் சொன்னாய் வள்ளி. நெகிழிப் பைகளினால் பல தீமைகள் ஏற்படுகின்றன. எனவே, நாம் அனைவரும் அதன் பயன்பாட்டினைத் தவிர்க்க வேண்டும்.

சிகரன் : அம்மா, மழை வரும் போலத் தோன்றுகிறது. வாருங்கள், விரைந்து பொருள்களை வாங்கிக் கொண்டு வீடு செல்வோம்.

## நடவடிக்கை 1

**உரையாடலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

## நடவடிக்கை 2

**உரையாடலைப் பாகமேற்று நடித்துக் காட்டுக.**

### அருஞ்சொற்கள்

- துவையல்
- அடிக்கடி
- ஆற்றல்
- பயன்பாடு
- செயல்படுவோம்

2.3.11 - உரையாடலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

ஆசிரியர் குறிப்பு:

- உரையாடலைப் பாகமேற்று வாசிக்கப் பணித்தல்.
- பாகமேற்று உரையாடலை வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் குழு முறையில் வாசிக்கச் செய்தல்.

வி.வ.கூ: சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் | உ.சி.தி: பயன்படுத்துதல் | 21ஆம் நூ. தி: சிந்தனையாளர்

# பாடம் 3 நாமும் நடிக்கலாம்

## வாசித்து எழுதுக.



ஆதித்தன் : நமது பள்ளியின் பரிசளிப்பு விழாவில் நாம் ஒரு நாடகத்தை நடத்தலாமா?

பூமகன் : நடத்தலாமே! புறாக்களும் வேடனும் கதையை நடித்திடுவோமா?

மலர்மகள் : அதையே நடிக்கலாம்.


ஆதித்தன் : நான் வேடனைப் போல் சிரித்துக் காட்டட்டுமா?
ஹாஹா... ஹா.... ஹா....

பூமகன் : நான் பறவைகள் போலக் கீச்சிடுவேன்... கீச்.. கீச்... கீச்

மலர்மகள் : நாடகத்திற்கு வேண்டிய வில், அம்பு, தலைப்பாகை, முகமூடிகள் போன்றவற்றைத் தயாரிப்போம்.

பூமகன் : வில், அம்புகளை எவ்வாறு செய்வதென்று தெரியுமா? நான் சொல்லித் தருகிறேன். மூங்கிலை வளைத்துக்கட்டி வில் செய்யலாம், அட்டைகளை வெட்டி அம்பு செய்யலாம்; முகமூடிகளையும் தயாரிக்கலாம்.

ஆதித்தன் : அப்படியே செய்வோம். கைவினைப் பொருள்கள் செய்வதில் உனக்கு அதிகம் திறமை உள்ளது என்று எங்களுக்குத் தெரியுமே பூமகன்.




## நடவடிக்கை 1

**உரையாடலை ஏற்ற தொனியுடன் வாசித்து முடிவை எழுதுக.**

### சொல்லும் பொருளும்

- ஆதி - முதல்
- குதூகலம் - மகிழ்ச்சி
- துரிதம் - விரைவு
- பந்தம் - சொந்தம்

## நடவடிக்கை 2

**கொடுக்கப்பட்ட உரையாடலை 100 சொற்களில் எழுதி முடித்திடுக.**

பூங்கொடி : நாம் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து நம் பள்ளியில் ஒரு தோட்டம் போடுவோம்.

வான்மதி : மிகச் சிறந்த திட்டம். நம் பள்ளியும் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். சரி, நாம் எங்குத் தோட்டம் போடலாம்?

திங்களன் : பள்ளி வளாகத்தில் விளையாடுவதற்கு இடம் ஒதுக்கிவிட்டுத் தோட்டம் போடுவோம்.

பூங்கொடி : நமது திட்டத்தைப் பற்றி ஆசிரியரிடம் முதலில் கலந்துரையாடுவது சிறப்பல்லவா?

3.6.14 - 100 சொற்களில் உரையாடல் எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு:

- குழு முறையில் உரையாடலைப் பாகமேற்று வாசிக்கப் பணித்தல்.
- உரையாடலை முறையாக எழுதி நிறைவு செய்யப் பணித்தல்.

வி.வ.கூ: ஆக்கமும் புத்தாக்கமும்    உ.சி.தி: ஆக்கச் சிந்தனை    21ஆம் நூ. தி: குழுவாகச் செயல்படுதல்

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

### வெற்றி வேற்கையையும் பொருளையும் அறிக.



மதிப்பிற்குரிய வகுப்பு ஆசிரியருக்கும் சக மாணவ மணிகளுக்கும் என் முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். கரிகாற்சோழ மன்னரைப் பற்றிப் பேச வாய்ப்பளித்தமைக்கு மிக்க நன்றி.

அவையோரே!

சோழ நாட்டைக் கரிகாற்சோழன் என்ற ஓர் அரசன் ஆண்டு வந்தார். இவர் குழந்தையாக இருக்கும்போதே நாட்டைக் கைப்பற்றிக் கொள்ள பகைவர்கள் முயன்றனர். ஒரு சமயம் இவரது காலில் நெருப்புப்பட்டுக் கருகிவிட்டது. அதனால், அவருக்குக் கரிகாற்சோழன் என்ற பெயர் உண்டாயிற்று.

கரிகாற்சோழன் குடிமக்களிடம் அன்புடன் நடந்துகொள்வார். நீதியுடன் ஆட்சி செய்தார். மேலும், அறச்சிந்தனை மிக்கவராகவும் திகழ்ந்தார். அதனால், இவரின் நாடு செழித்தது. குடிமக்கள் இன்புற்று வாழ்ந்தனர். **மன்னர்க் கழகு செங்கோன் முறைமை** என்ற வெற்றி வேற்கை வரி கரிகாற்சோழனுக்கு மிகவும் பொருந்தும்.

இவருக்கு வியாபாரத்தில் அதிக ஈடுபாடு என்பதால் காவிரி ஆற்றின் முகத்துவாரத்தில் காவிரிப்பூம்பட்டினம் என்ற ஓர் ஊரை உண்டாக்கினார். மக்களின் கல்வியையும் அதிகமாக ஆதரித்தார். புலவர்களின் ஆற்றலுக்கும் அறிவுக்கும் வெகுமதி அளித்துச் சிறப்பித்தார். சிறந்த ஆட்சி செய்த மன்னர்களில் இவரே முதன்மை பெற்றவர் என மக்கள் புகழ்ந்தனர்.

ஒரு நாட்டின் செழிப்பு அந்நாட்டை ஆட்சி புரியும் மன்னரைப் பொருத்தே அமையும். அவ்வரிசையில் கரிகாற்சோழனும் அடங்கியுள்ளார். ஒரு சிறந்த அரசரைப் பற்றிப் பேச எனக்கு வாய்ப்புக் கிட்டியதற்குப் பெருமை கொள்கிறேன். நன்றி.

என்னை நுணுகு

**தகவல் கூடம்**

- 25 வருடம் - வெள்ளி விழா
- 30 வருடம் - முத்து விழா
- 40 வருடம் - மாணிக்க விழா
- 50 வருடம் - பொன் விழா
- 60 வருடம் - வைர விழா
- 75 வருடம் - பவள விழா
- 100 வருடம் - நூற்றாண்டு விழா

## வெற்றி வேற்கையும் பொருளும்

- **மன்னர்க் கழகு செங்கோன் முறைமை**

- அரசர்க்குரிய சிறப்பு, நீதியோடு ஆட்சி நடத்துதல் ஆகும்.

### நடவடிக்கை 1

**வெற்றி வேற்கையையும் பொருளையும் அறிந்து மனனம் செய்து கூறுக; எழுதுக.**

### நடவடிக்கை 2

**வெற்றி வேற்கைக்குப் பொருத்தமான சூழல் அல்லது கதையை உருவாக்கிக் கூறுக.**

### நடவடிக்கை 3

**ஒரு நாட்டை ஆட்சி செய்ய மன்னருக்கு இருக்க வேண்டிய பண்புகளைப் பற்றிக் குழுவில் உரையாடுக.**

4.12.2 - ஐந்தாம் ஆண்டுக்கான வெற்றி வேற்கையையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு:


- உரையைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- வெற்றிவேற்கையையும் பொருளையும் அறிந்து கூறச் செய்தல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை    உ.சி.தி: சூழலமைவுக் கற்றல்    21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

# பாடம் 5 இலக்கணம்

## திரிதல் விகாரப் புணர்ச்சியை அறிக.

→ நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் புணரும்போது **ஓர் எழுத்து மற்றோர் எழுத்தாகத் திரிந்து வருவது** திரிதல் புணர்ச்சியாகும்.




**ணகர, னகர மெய்யீறு வல்லினத்தோடு புணர்தல்.**

- **ண் → ட் ஆகும்** (க், ச், ப் முன் மட்டும்)

**எடுத்துக்காட்டு:**

மண் + குடம் = மட்குடம்
மண் + பாண்டம் = மட்பாண்டம்
கண் + செவி = கட்செவி

- **ன் → ற் ஆகும்** (க், ச், ப் முன் மட்டும்)

**எடுத்துக்காட்டு:**

பொன் + குடம் = பொற்குடம்
பொன் + சரடு = பொற்சரடு
பொன் + பாதம் = பொற்பாதம்

## நடவடிக்கை 1

**சேர்த்தெழுதுக.**

1. கண் + சுடர் = ______
2. மண் + பானை = ______
3. தன் + காப்பு = ______
4. பொன் + கலம் = ______
5. பொன் + சரம் = ______
6. முன் + பகல் = ______
7. மண் + சட்டி = ______

5.7.3 - திரிதல் விகாரப் புணர்ச்சியில் ணகர, னகர மெய்யீறு வல்லினத்தோடு புணர்தல் பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.



ஆசிரியர் குறிப்பு:

- திரிதல் விகாரப் புணர்ச்சியை அறியச் செய்தல்.
- சேர்த்தெழுதுதல் பகுதியைப் பிழையறச் செய்யப் பணித்தல்.

வி.வ.கூ: மொழி    உ.சி.தி: பயன்படுத்துதல்    21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

## தொகுதி 6 நன்னெறி போற்றுக

### பாடம் 1 எண்ணமே மகிழ்ச்சி

**கதையைக் கூறுக.**




**நடவடிக்கை 1**

**குறிப்புகளைத் துணையாகக் கொண்டு முழுக்கதையையும் சொந்த நடையில் கூறுக.**

1.8.5 - நீதிக் கதையைக் கூறுவர்.

ஆசிரியர் குறிப்பு:

- தொடர் படங்களைப் பார்த்து விளக்கம் பெறச் செய்தல்.
- குறிப்புகளைக் கொண்டு நீதிக் கதை ஒன்றனைக் கூறப் பணித்தல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை    உ.சி.தி: சீர்தூக்கிப் பார்த்தல்    21ஆம் நூ. தி: தாங்கும் வலிமை

## தொனியுடன் வாசித்திடுக.



சாலமன் எனும் மன்னன் நீதி தவறாமல் ஆட்சி செய்து வந்தான். ஒரு நாள் அம்மன்னனின் சபைக்கு ஒரு விசித்திரமான வழக்கு வந்தது.

இரண்டு பெண்கள் ஒரு குழந்தைக்காக உரிமை கொண்டாடி அரசவைக்கு வந்தனர். சிறு குழந்தைக்குத் தன் தாய் யாரெனத் தெரியவில்லை. குழந்தையின் முகச்சாயலை வைத்து உண்மையான தாயைக் கண்டறியவும் முடியவில்லை.

வெகு நேரம் யோசித்த மன்னன், ஒரு முடிவுக்கு வந்தார். “காவலரே! இந்த இரண்டு பெண்களும் இக்குழந்தையைத் தம் குழந்தை என்கின்றனர். அதனால், இக்குழந்தையை ஆளுக்குப் பாதியாகக் கொடு!” என்று உத்தரவிட்டார்.

மன்னனின் தீர்ப்பைக் கேட்ட ஒரு பெண் மகிழ்ச்சி அடைந்தாள். மற்றொருத்தியோ கதறித் துடித்தாள். அரசரின் உத்தரவை நிறைவேற்ற காவலன் ஆயத்தமானான். சிறு குழந்தையை நோக்கி வேகமாக வந்தான். “மன்னா! மன்னா! வேண்டாம் மன்னா! இக்குழந்தையை ஒன்றும் செய்துவிடாதீர்கள். அந்தப் பெண்ணிடமே குழந்தையைக் கொடுத்துவிடுங்கள்!” என்று கண்ணீர் மல்கக் கூறினாள். மற்றொரு பெண்ணோ அக்குழந்தையைப் பெற்றுக் கொள்ள மகிழ்ச்சியுடன் நின்றாள்.

மன்னன் சாலமனின் சந்தேகம் தீர்ந்தது. தான் பெற்றெடுத்த குழந்தை உயிரோடு இருந்தாலே போதும் என்று துடிப்பவளே உண்மையான தாய் என முடிவு செய்தார். உண்மையை நிலைநாட்டினார். பேராசை கொண்ட மற்றொரு பெண்ணுக்குச் சரியான தண்டனையையும் விதித்தார். நீதி வழுவா மன்னனை மக்கள் பாராட்டி மகிழ்ந்தனர்.

**செவிமடுத்திடுக**

## நடவடிக்கை 1

**கதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**


### அருஞ்சொற்கள்

- விசித்திரமான
- முகச்சாயல்
- ஆயத்தமானான்
- நிலைநாட்டினார்
- உரிமை

## நடவடிக்கை 2

**படங்களுக்கு ஏற்ற கதையை எழுதி வாசித்துக் காட்டுக.**

அ)




ஆ)




2.3.12 - நீதிக் கதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.




ஆசிரியர் குறிப்பு:

- கதையை வாசித்து அறியச் செய்தல்.
- சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிக்கப் பணித்தல்.

வி.வ.கூ: ஆக்கமும் புத்தாக்கமும் | உ.சி.தி: சிந்தனை வியூகம் | 21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

## பாடம் 3 பேராசை

### கதையை எழுதுக.




### நடவடிக்கை 1

**தொடர்படங்களைக் கொண்டு 100 சொற்களில் கதை ஒன்றனை எழுதுக.**

### நடவடிக்கை 2

**படங்களுக்கு ஏற்ற கதையை எழுதுக.**



## நடவடிக்கை 3

**தொடர்படங்களைக் கொண்டு கதை ஒன்றனை எழுதுக.**




**கதையில் கூறப்படும் நன்னெறிப் பண்புகளைப் பற்றியும் அவற்றுக்கான காரணங்களையும் விளக்கி உரையாடுக.**


3.6.17 - 100 சொற்களில் தொடர்படத்தைக் கொண்டு கதை எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு:

- தொடர்படங்களைப் பார்த்து உரையாடச் செய்தல்.
- தொடர்படங்களுக்குப் பொருத்தமான கதையை எழுதி வாசிக்கப் பணித்தல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை உ.சி.தி: பகுத்தாய்தல் 21ஆம் நூ. தி: கொள்கையுள்ளவர்

## திருக்குறளையும் பொருளையும் அறிக.



வழக்கம்போல் அன்றும் தாத்தா தம் பேரக் குழந்தைகளுக்குக் கதை சொல்ல ஆரம்பித்தார். "தாத்தா, இன்று என்ன கதையைச் சொல்லப் போகிறீர்கள்?" என்றான் பேரன் சுகந்தன்.

"இன்று நான் விகடகவியின் கதை ஒன்றனைக் கூறப் போகிறேன்," என்றார் தாத்தா. ஆர்வத்தில் பேரப் பிள்ளைகள் எதிரில் அமர்ந்து காத்திருந்தனர்.

மன்னர் ஒருவர் அரசவையில், விகடகவியை அழைத்து மூன்று கேள்விகள் கேட்டார். அமைச்சர்களும் நிறைந்து அமர்ந்திருந்தனர். மன்னர் தமது முதல் கேள்வியை ஆரம்பித்தார். "விகடகவியே, ஏன் என் உள்ளங்கைகளில் உரோமம் முளைக்காமல் இருக்கிறது?" என வினவினார்.

விகடகவி மன்னரை வணங்கி, "மன்னா, நீங்கள் அள்ளி அள்ளிப் பொற்காசுகளைக் கொடுக்கிறீர்கள். எனவே, பொற்காசுகள் பட்டு உங்கள் உள்ளங்கையில் உரோமம் முளைக்கவில்லை," என்று பதிலளித்தார்.

புன்னகையுடன் மன்னர் மேலும், ஒரு கேள்வியைக் கேட்டார். "அப்படியென்றால், இந்த அவையில் உள்ள அனைவருக்கும் ஏன் உள்ளங்கையில் உரோமம் இல்லை?" என்று கேட்டார்.

“மன்னவா, இவர்கள் அனைவரும் மன்னரிடமிருந்து பரிசு கிடைக்கவில்லையே என்ற ஏமாற்றத்தில் இரண்டு கைகளையும் சேர்த்துப் பிசைந்து கொண்டே இருக்கிறார்கள். அதனால்தான், அவர்களுக்கும் அதே நிலைமை,” என்று அறிவார்ந்து கூறினார். பிறர் மனம் புண்படாமல் நகைச்சுவையாகப் பேசி மகிழ்விக்கும் விகடகவியை மன்னர் பாராட்டினார்.

“தாத்தா, இக்கதைக்கு ஏற்ற ஒரு திருக்குறள் கூறுகிறேன்,” என்றான் சுகந்தன்.

**வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல். (291)**

“அருமை சுகந்தா!” எனப் பாராட்டினார் தாத்தா.

**அருஞ்சொற்கள்**

- ஆர்வம்
- அமைச்சர்
- உரோமம்
- புன்னகை
- அறிவார்ந்து

## திருக்குறளும் பொருளும்

- **வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**
  **தீமை இலாத சொலல். (291)**

- வாய்மை என்று கூறப்படுவது எது என்றால், அது மற்றவர்க்கு ஒரு சிறிதும் தீமை இல்லாத சொற்களைச் சொல்லுதல் ஆகும்.

### நடவடிக்கை 1

**திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுக; அழகான கையெழுத்தில் எழுதிக் காட்டுக.**

### நடவடிக்கை 2

**திருக்குறளுக்கு ஏற்ப ஒரு நாடகத்தை உருவாக்கி நடித்துக் காட்டுக.**



4.3.5 - ஐந்தாம் ஆண்டுக்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு:

- கதையை வாசிக்கப் பணித்தல்.
- திருக்குறளையும் அதன் பொருளையும் மனனம் செய்து ஒப்புவித்தல்.

வி.வ.கூ: ஆக்கமும் புத்தாக்கமும் உ.சி.தி: ஆய்வுச் சிந்தனை 21ஆம் நூ. தி: சிந்தனையாளர்


## பாடம் 5 இலக்கணம்

### வலிமிகும் இடங்கள் அறிக.



• சொற்றொடர்களில், வருமொழி ‘க், ச், த், ப்’ ஆகிய வல்லெழுத்துகளில் தொடங்கினால் நிலைமொழி ஈற்றில் சில இடங்களில் வல்லெழுத்து மிகும்.

• வருமொழியின் முதல் எழுத்து வல்லினமாக இருந்தால்தான் வல்லினம் மிகும்



குறிப்பு:
**நிலைமொழி - முதலில் நிற்கும் சொல்**
**வருமொழி - அடுத்து நிற்கும் சொல்**



அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களுக்குப்பின் வலிமிகும்.

எடுத்துக்காட்டு:

| | | | |
|---|---|---|---|
| அப்படி | + | சொல் | = அப்படி**ச்** சொல் |
| இப்படி | + | பேசு | = இப்படி**ப்** பேசு |
| எப்படி | + | கிடைத்தது | = எப்படி**க்** கிடைத்தது? |

### நடவடிக்கை 1

**சேர்த்தெழுதுக.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. அப்படி | + | கூறு | = ______ | 4. அப்படி | + | தேடு | = ______ |
| 2. இப்படி | + | கேள் | = ______ | 5. இப்படி | + | போடு | = ______ |
| 3. எப்படி | + | சேர்த்தாய் | = ______ | 6. எப்படி | + | கண்டாய் | = ______ |



5.8.4 - அப்படி, இப்படி, எப்படி என்பனவற்றுக்குப்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு:
• வலிமிகும் இடங்களை அறிந்து கொள்ளச் செய்தல்.
• நடவடிக்கையைப் பிழையறச் செய்யப் பணித்தல்.


வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை உ.சி.தி: பகுத்தாய்தல் 21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்


தொகுதி 7

# நாடும் வளமும்

## பாடம் 1 மலேசியாவில் விவசாயம்

### வரைபடத்தைப் பார்த்து உரையாடுக.




### நடவடிக்கை 1

வரைபடத்தில் உள்ள தகவல்களைப் பார்த்து விவரித்துக் கூறுக.

## நடவடிக்கை 2

**வரைபடத்திலுள்ள சுற்றுலாத் தலங்கள் பற்றி விவரித்துக் கூறுக.**




## நடவடிக்கை 3

**உன் வசிப்பிடத்தை வரைபடமாக வரைந்து குழுவில் விளக்குக.**

1.9.2 - வரைபடத்தில் உள்ள தகவல்களை விவரித்துக் கூறுவர்.

ஆசிரியர் குறிப்பு:

- வரைபடத்தைப் பார்த்து விளக்கம் பெறச் செய்தல்.
- வரைபடத்திலுள்ள தகவல்களை விவரித்துக் கூறப் பணித்தல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை　　உ.சி.தி: ஆய்வுச் சிந்தனை　　21ஆம் நூ. தி: சிந்தனையாளர்

## பாடம் 2 விவசாயத்தில் இயற்கையும் நவீனமும்

### வாசித்து அறிக, உரையாடுக.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு விவசாயம் முதுகெலும்பாக விளங்கும் துறையாகும். இத்துறையை நாம் திறம்பட நடத்தினால் மட்டுமே அதன் சிறப்பை அறிந்து உணர முடியும்.

விவசாயத் துறையில் இயற்கையான முறையைச் செயல்படுத்துவதே சாலச் சிறந்தது என்று கூறப்படுகின்றது. இயற்கை விவசாயம், மூலிகைகளைப் புனிதமாகப் போற்றியது. பல கொடிய நோய்களையும் குணப்படுத்தும் வல்லமை கொண்ட அரிய பல மூலிகைகளை நம் முன்னோர்கள் அறிந்து பயன்படுத்தினர்.



இந்நிலை இன்று இரசாயனம் பயன்படுத்தி நவீன விவசாயம் எனும் பெயரில் பல விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்றே கூற வேண்டும். பூச்சிக்கொல்லி மருந்துகளும் இரசாயன உரங்களும் மண்ணின் தன்மையை மாசுபடுத்துகின்றன. இதனால், நிலங்களில் விளையும் பயிர்களையும் வேலியோரங்களில் வளரும் மூலிகைகளையும் இழந்து வருகின்றோம்.

கால்நடைகள் இயற்கை விவசாயத்தில் மனிதர்களுக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்தன. குறிப்பாக, மாடுகளைக் கூறலாம். வயல்களில் ஏர் உழுவது, நீர் இறைப்பது எனப் பெருமளவில் பங்காற்றின. மேலும், விளைச்சலுக்குத் தேவையான எருவையும் உண்ண உணவான பசுப்பாலையும் வழங்கின.

ஆனால், இன்று நவீனம் எனும் பெயரில் இரசாயன உரங்கள் இடப்பட்டும் பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளிக்கப்பட்டும் விவசாயத் துறையில் எதிர்மறையான மாற்றங்கள் உருவாகிவிட்டன. உழவர்களின் உற்ற நண்பனான

மண்புழுக்கள் அழிக்கப்படுகின்றன. நிலத்தில் இரசாயன நஞ்சை விதைத்துச் செழிப்பான மண்ணை மாசுபடச் செய்கின்றது.

மனிதர்கள் மட்டுமல்ல, பிற உயிரினங்களும் பூமியில் வாழ வேண்டும். இதனைப் புரிந்து, மனிதனைச் சுற்றியுள்ள மரம், செடி, கொடி, கால்நடைகள், பறவைகள் என அனைத்தும் நலமாய் வாழ வழிவகுக்க வேண்டும். ஒவ்வோர் உயிரினமும் வாழ்வில் ஒன்றையொன்று சார்ந்தே வாழ்வது இயல்பு.

இத்தகைய உணர்வோடு இயற்கையின் வழியில் செயல்பட்டால் பூமித்தாய் நிச்சயம் நம் மண்ணின் துயர் போக்குவாள். செயற்கையான செயல்களுக்குப் பலியாகாமல் உயிர்கள் அனைத்தும் செழித்து வாழலாம்.



### அருஞ்சொற்கள்

- திறம்பட
- பாரம்பரியம்
- புனிதமாக
- கால்நடைகள்
- எதிர்மறையான

## நடவடிக்கை 1

**வாசிப்புப் பகுதியை வாசித்துத் தகவல்களை ஒப்பீடு செய்து கூறுக.**

## நடவடிக்கை 2

**தொழிற்றுறையையும் விவசாயத்துறையையும் ஒப்பிடுக.**

| தொழிற்றுறை | விவசாயத்துறை |
|---|---|
| | |
| | |
| | |

2.4.12 - வாசிப்புப் பகுதியில் உள்ள தகவல்களை அடையாளம் கண்டு ஒப்பிடுவர்.

ஆசிரியர் குறிப்பு:
- வாசிப்புப் பகுதியில் உள்ள தகவல்களை அறியச் செய்தல்.
- தகவல்களை அடையாளம் கண்டு வரிப்படத்தின் மூலம் ஒப்பீடு செய்யப் பணித்தல்.

வி.வ.கூ: அறிவியலும் தொழில்நுட்பமும் உ.சி.தி: பகுத்தாய்தல் 21ஆம் நூ. தி: தகவல் நிறைந்தவர்